முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1461

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.09.2023**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார தான தர்மமே
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரமே என் அவதாரமே
2. அவதார ஞானியே அரங்கனே
ஆறுமுகன் யான் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12 ம் நாள், 29.09.2023, வெள்ளிக்கிழமை)
புவனம் உய்வுற எடுத்துரைப்பேன்
புண்ணியவழி காட்டும் அரங்கன் உன்
3. உன் ஞானமே உலகில் சிறந்ததப்பா
உன் தயவே உலகில் பாதுகாப்பு நிறைந்ததப்பா
கருணைகொண்டு உலகோரை நோக்கி
கண்ணியமுற ஞான வழி காட்டுகின்ற
4. அரங்கன் உன் மார்க்கத்தை ஆறுமுகன் யான்
அகிலத்தில் என் மார்க்கமாக மாற்றி
வகைபட உன்வழி வருவோர்க்கு
வரம்தந்து ஆறுமுகன் யான் காத்துவர
5. வருகவே கலியினில் அகத்தியர் சன்மார்க்க சங்கம்
வல்லமைபட உலகோரைத் தேற்றும்
அழியாமை தந்து அவரவரும் இனி பிறவாத
ஆற்றல்மிக்க ஞானப்பிறவிக்கு வகை செய்யும்
6. வகையான தர்மமும் வையகம் எங்கும் அகத்தியர் சன்மார்க்க சங்கமும்
பெருமைபட வளர்ந்தோங்கி பேருலகமெல்லாம்
பிரமிக்கவைக்கும் ஞான ஆட்சியை வருங்காலம் தந்து உலகோரை மீட்கும் காக்கும்
வரமென அரங்கன் வழி மக்கள் சேர்ந்தால் போதும் இந்த அற்புதம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—